திரு. பி. மாணிக்கம்: மேலவை விதி 43-ன்கீழ் நான் ஒரு ஒத்திவைப்புத தீர்மானம் கொடுத்திருந்தேன். அது இன்று எடுக்கப்படுமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இன்று கூட்டத் தொடரின் கடைசி நாள், அநேக ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அது மாதிரி வந்திருக்கின்றன. சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பார்த்து அதன் பிறகு தான் முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. இப்பொழுது நான் முடிந்தவரை வரிசைக் கிரமப்படி எடுக்கிறேன்.

THIRU G. VASANTHA PAI: On a matter of information, Sir. I have also given a Call-attention notice under Rule 42. If it is not going to be taken up in this Session, this call-attention notice may be taken up in the next Session. so that the answer may be got.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதை நேற்று தான் கொடுத்திருக்கிறீர்கள்.

THIRU G. VASANTHA PAI: I am only asking that it may be taken up in the next session without asking for further notice.

4. ஒத்தி வைப்புத் தீர்மானம்

(1) மருத்துவக் கல்லூரிக்கு மாணவர் தேர்வு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: "மெடிக்கல் காலேஜ் அட்மிஷன்" பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை திரு. க. இராமமூர்த்தி அவர்கள் கொடுத்துள்ளார். அது எந்த வகையில் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குட்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

*திரு. க. இராமமூர்த்தி: என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானம்:

I seek the permission of this House under Rule 44 of the Tamil Nadu Legislativt Council Rules for adjourning the Business of this House to discuss a matter of urgent public importance, viz., the situation arising out of a number of claimants having gone to the Court of Justice on their non-selection to the Medical course of the current year, the resultant insecurity of the students selected and admitted for the current college year in the Medical Colleges and their difficulty in pursuing coaching in Medical Colleges.

இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் தேர்வு நடத்தியதைப் பொறுத்தவரை பெரிய அளவிற்குக் காலதாமதம் ஆயிற்று. காலதாமதமானதற்குப்

பின்னுல் நீதிமன்றத்திற்கு இரண்டொரு மாணவர்கள் சென்ற காரணத்தினுல், அவர்களைத் திரும்பவும் கல்லூரியில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று தீர்ப்பு வழங்கப்பட்டதினுல், மேலும் 2 பேரைக் கல்லூரியில் சேர்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்படி நிலைமை ஏற்பட்டபோது, ஏற்கெனவே இருந்தவர்களுடைய இடத்தில் இவர்கள் வருவார்களா அல்லது அதிகமாக இடங்களை ஏற்படுத்தி சேர்த்துக்கொள்ளப்படுவார்களா என்ற பிரச்சினைகள் இருந்து வந்தன. நேற்றும் அதற்கு முன் தினமும் வந்திருக்கிற தகவல்படி மேலும் 20 தேர்ந்தெடுக்கப்படாத மாணவர்கள் தங்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தகுதி, நியாயம் எல்லாம் இருக்கிறது என்ற காரணத்தைச் சொல்லி நீதிமன்றத்திற்குப் போயிருக்கிருர்கள். நீதிபதி அதை ஒரு பெஞ்ச்க்கு அனுப்பியிருக்கிருர். இந்த நிலையிலே அந்த 20 வழக்குகளையும் ஒன்றுக்கு மேற்பட்ட நீதிபதிகள் விசாரித்து அவர்கள் தகுதியுள்ளவர்கள் என்று தீர்மானிக்கின்ற நிலை ஏற்படுமானுல், அந்த 20 பேரை மீண்டும் வைத்தியக் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற நிலை ஏற்படும்போது, அங்கே ஏற்கெனவே இருக்கின்ற 20 மாணவர்களை வெளியே அனுப்புகின்ற நிலை ஏற்படும். இப்பொழுது அங்கே பயின்றுகொண்டிருக்கின்ற 20 மாணவர்களும் வேறு வைத்தியக் கல்லூரிகளுக்குச் செல்ல முடியாத நிலை. அப்படியே மற்ற கலைக் கல்லூரிகளில் காலம் கடந்து செல்லுகின்ற நிலை. இப்பேர்ப்பட்ட சிக்கல்களை எல்லாம் தளர்த்தி அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்தாலும்கூட, பாடங்களைப் படிக்க முடியாத நிலைமை. ஏற்கெனவே சேர்த்துக்கொள்ளப்பட்ட 20 மாணவர்களின் இடங்களில் வேறு மாணவர்கள் 20 பேர் வருகின்றுர்கள் என்ற நிலையில் மேற்கொண்டு அங்கே படிக்கின்ற மாணவர்கள் கல்வியைத் தொடர விடாமல் நிறுத்தி வைத்தல் போன்ற நிலைமை. அப்படியே 20 மாணவர்கள் தீர்ப்பப்படி வந்தால், அவர்களை நிறுத்தி வைப்பதா அல்லது சேர்ப்பதா என்ற நிலை. இப்படி பலதரப்பட்ட நிலைமைகள் மலிந்திருக்கின்றன. இந்த ஆண்டு தமிழ் நாட்டிலுள்ள வைத்தியக் கல்லூரிகளில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையைப் பொறுத்தவரை, மிகக் குழப்பமான நிலை ஏற்பட்டிருப்பதால், தரமே குறைந்து விடுமோ என்ற அச்சம் வேறு. மாணவர்களுக்கு இதன் காரணமாகக் குழப்பமான நிலை. ஏற்கெனவே சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் தொடர்ந்து படிக்க முடியுமா என்ற சந்தேகம். ஒருவேளை தாங்கள் வெளியே அனுப்பட்டு விட்டால், வேறு எந்தக் கல்லூரியிலாவது சேர்ந்து முழுக் கல்வியையும் பெற முடியுமா என்ற நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் மனதிலே கொண்டு புதிய அளவில் தீர்மானங்கள் செய்ய வேண்டும். தேர்வு முறையிலே திருத்தம் கொண்டு வருவது ஒரு பக்கம் இருந்தாலும் கல்வி முறையிலே திருத்தம் கொண்டு வந்தாக வேண்டும். அவர்கள் பாதிப்புக்கு உள்ளாவது ஓராண்டு என்றுலும் கூட, ஓராண்டிலே படிக்கின்ற அத்தனை மாணவர்களும் 5 ஆண்டுகளுக்குப் பிறகு மருத்துவர்களாக வருகின்றபோது, குறைப் படிப்பு படித்து விட்டு வந்தவர்களாகத்தான் இருப்பார்கள்.

இவ்வாறு குறைப் படிப்பு படித்து விட்டு மருத்துவர்களாக வந்தால், அது சமுதாயத்தைப் பாதிக்கும் என்பதால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விட்டு வைத்தியக் கல்லூரிக்கு மாணவர் தேர்வு பற்றி விவாதிக்க தலைவரவர்கள் அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்: 1978-79 ஆம் ஆண்டுக்கான முதல் வருட எம்.பி.பி.எஸ். படிப்புக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுத்ததில் 20 மாணவர்கள் அவர்களைத் தேர்வில் சரியாக தேர்வு செய்யவில்லை என்றும் மற்றும் காரணங்களைச் சொல்லி உயர் நீதிமன்றத்தில் ரிட் தாக்கல் செய்துள்ளார்கள். அது டிவிஷன் பெஞ்ச் முன்னால் வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. முதல் ஆண்டு எம்.பி.பி.எஸ்.க்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு படித்துக் கொண்டிருப்பவர்களுக்குத் தொடர்ந்து பாதுகாப்பு கிடைக்கும். யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படாது. நீதிமன்றத்தின் தீர்ப்பு தெரிந்ததும், அதற்கேற்ப அரசு நடவடிக்கை எடுக்கும். இது குறித்து ஒன்றுக்கு மேற்பட்ட நீதிபதிகள் விசாரிக்கும் நிலையில் இருப்பதால், மேற்கொண்டு விரிவான விளக்கம் தேவையில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு உறுப்பினர் எழுப்பியுள்ள ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு என் அனுமதியை மறுக்கிறேன்.

(2) 13-9-1978 அன்று குறளகத்திலிருந்து மறியல் செய்ய வந்த மாணவர்கள் மீது ரிசர்வ் வங்கி அருகே காவல் துறையினர் தாக்குதல் குறித்து.

அடுத்தபடியாக மாண்புமிகு உறுப்பினர் மாணிக்கம் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். அதே போல மாண்புமிகு உறுப்பினர்கள் ஆறுமுகம், தங்கபாண்டியன் மற்றும் இராமமூர்த்தி ஆகியோரும் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். கடைசி மூன்றும் மாண்புமிகு முதலமைச்சர் சம்பந்தப்பட்டவை. முதலமைச்சர் அவையில் இல்லை. அவை முன்னவரின் கருத்து என்ன?

மாண்புமிகு திரு. க. இராசா முகமது: மாண்புமிகு உறுப்பினர்கள் நேற்றைய தினம் நடைபெற்ற சில சம்பவங்கள் குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான தகவல்கள் நமக்கு இப்பொழுது வரவில்லை என்ற காரணத்தால் அதை ஒரு சம்பிரதாயமாகக் கருதாமல் உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை அது பற்றிச் சொல்வதற்கு அனுமதித்து அதைப் பதிவேட்டிலும் இடம் பெறுமாறு சேர்க்கலாம்.